**புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு**

**டவர் மண்டப அரங்க மன்றம்**

# பதவி – வெற்றிடங்கள்

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் டவர் மண்டப அரங்க மன்றத்தின் வெற்றிடம் உள்ள கீழ் குறிப்பிடப்பட்ட பதவிகளுக்காக தகைமை பெற்ற இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்தப் பதவிகள் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்காக உரித்துடைய நிரந்தர பதவிகளாகும்.

## 01. பணிப்பாளர் (நாடக மேம்பாடு, கல்வி மற்றும் நிகழ்ச்சிகள்) - (HM 1-1)
**பதவி எண்ணிக்கை - 01**

**01.01 தகைமைகள் - வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

பல்கலைக்கழக மனியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து நாடகம் மற்றும் அரங்கியற்கலை/ கல்வி/ அழகியல்/ கலை/ வெகுசன தகவல் தொடர்பு துறைகளில் பட்டம்

**அத்துடன்**

குறித்த துறையில் பட்டப்பின்படிப்பு பட்டத்தை (Master) பெற்றிருத்தல்

**01.02 அனுபவம்**

அரச, அரச கூட்டுத்தாபனம், சபை, சட்டரீதியான நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றில் ''முகாமைத்துவ'' தரத்தின் பதவி ஒன்றில் குறைந்தது குறித்த துறையில் பதினைந்து (15) ஆண்டுகள் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**01.03 தகைமைகள் - உள்ளக விண்ணப்பதாரர்கள் (கீழுள்ள 1 அல்லது 2)**

1. மேல் குறிப்பிடப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல்.
2. முகாமைத்துவ (MM) மட்டத்தின் 1ஆவது தரத்தின் பதவி ஒன்றில் குறைந்தது 05 ஆண்டுகள் குறித்த விடயப் பரப்பில் சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.

**01.04 சம்பள அளவு: ரூபா 140,640-15**x4100-202,140/-

(முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 01/2025 இற்கு அமைவானது)

(குறித்த சுற்றுநிருபத்திற்கு அமைய 2025 ஆம் ஆண்டுக்கு உரித்துடைய அடிப்படைச் சம்பளம் மாதத்திற்கு ரூபா 105,399/- ஆகும். திறைசேரி மூலம் அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவாக ரூபா 17,800/- உரித்தாகும்.)

**01.05 வயது:** 35 வயதுக்கு குறையாத மற்றும் 55 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

**01.06 தேர்வு செய்யும் முறை:** கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை

**இந்தப் பதவிக்கு உரிய நன்மைகள்**

- ❖ திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை கொடுப்பனவுகள் உட்பட மற்ற அனைத்து கொடுப்பனவுகள்
- ❖ அரச வர்த்தகச் சுற்றுநிருபம் 02/2022 இற்கு அமைய தொலைபேசி கொடுப்பனவு
- ❖ அரச வர்த்தகச் சுற்றுநிருபத்திற்கு அமைய போக்குவரத்து வசதிகள்

## 02. உதவி / பிரதிப் பணிப்பாளர் (கல்வி, ஆய்வு மற்றும் பாதுகாப்பு) - (MM 1-1)
**பதவி எண்ணிக்கை - 01**

**02.01 தகைமைகள் - வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து நாடகம் மற்றும் அரங்கியற்கலை/ கல்வி/ அழகியல்/ கலை/ வெகுசன தகவல் தொடர்பு துறைகளில் பட்டம்

**02.02 அனுபவம்**

பட்டம் பெற்ற பின் அரச அல்லது அரச சார்பு அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றில் குறைந்தது குறித்த துறையில் ஓர் ஆண்டு அனுபவம் பெற்றிருத்தல்.

**02.03 வேறு தகைமைகள்**

கணினி பயன்பாடு மற்றும் ஆங்கில மொழியில் பணியாற்றும் திறன்

நாடகம் மற்றும் அரங்கியற்கலை அல்லது கல்வியியல் துறையில் பட்டப்பின்படிப்பு பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் மற்றும் கல்வி ஆய்வு செயற்பாடுகளில் ஈடுபட்டிருத்தல். குறித்த துறைக்கு தொடர்புடைய ஆய்வு புத்தகம் தயாரித்தல் மற்றும் தமிழ் மொழியில் பணியாற்றுவதற்கு இருக்கும் திறன் விசேட தகைமையாக கருதப்படும்.

**02.04 தகைமைகள் - உள்ளக விண்ணப்பதாரர்கள்**

மேல் குறிப்பிடப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல்.

கனிஷ்ட முகாமைத்துவ JM சேவை மட்டத்தில் குறித்த துறையில் அரச பதவி ஒன்றில் குறைந்தது 05 ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**02.05 சம்பள அளவு:** ரூபா 91,690-10 x2480-15x 3450-168,240/-

(முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 01/2025 இற்கு அமைவானது)

(குறித்த சுற்றுநிருபத்திற்கு அமைய 2025 ஆம் ஆண்டுக்கு உரித்துடைய அடிப்படைச் சம்பளம் மாதத்திற்கு ரூபா 71,730/- ஆகும். திறைசேரி மூலம் அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவாக ரூபா 17,800/- உரித்தாகும்.)

**02.06 வயது:** 22 வயதுக்கு குறையாத மற்றும் 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

**02.07 தேர்வு செய்யும் முறை:** கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை

**இந்தப் பதவிக்கு உரிய நன்மைகள்**

- ❖ திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை கொடுப்பனவுகள் உட்பட மற்ற அனைத்து கொடுப்பனவுகள்
- ❖ அரச வர்த்தகச் சுற்றுநிருபம் 02/2022 இற்கு அமைய தொலைபேசி கொடுப்பனவு

## 03. தொழில்நுட்ப உதவியாளர் MA 2-1
**பதவி எண்ணிக்கை - 01**

**03.01 தகைமைகள் - வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிறுவனம் ஒன்றில் இருந்து வழங்கப்படும் தேசிய தொழில் தகைமை NVQ ஐந்து (05) தரத்திற்கு குறையாத கணினி மென்பொருள் மற்றும் வன்பொருள் செயற்பாடுகளுக்கு தொடர்புடைய கற்கை ஒன்றை கற்றிருத்தல் வேண்டும்.

**03.02 வேறு தகைமைகள்**

கணினி மென்பொருள் மற்றும் வன்பொருள் செயற்பாடுகளுக்கு தொடர்புடைய டிப்ளோமா கற்கை ஒன்றை கற்றிருத்தல். நாடகம் மற்றும் அரங்கியற்கலையை பாடத்தினை கற்றிருத்தல், தமிழ் மொழி/ ஆங்கில மொழியில் பணியாற்றும் திறன் விசேட தகைமையாக கருதப்படும்.

**03.03 தகைமைகள் - உள்ளக விண்ணப்பதாரர்கள்**

மேல் குறிப்பிடப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல்.

**03.04 சம்பள அளவு:** ரூபா 50540-10x 540 -7x 630- 4 x 890- 20x 1190 -87,710

(முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 01/2025 இற்கு அமைவானது)

(குறித்த சுற்றுநிருபத்திற்கு அமைய 2025 ஆம் ஆண்டுக்கு உரித்துடைய அடிப்படைச் சம்பளம் மாதத்திற்கு ரூபா 43,379/- ஆகும். திறைசேரி மூலம் அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவாக ரூபா 17,800/- உரித்தாகும்.)

**03.05 வயது:** 18 வயதுக்கு குறையாத மற்றும் 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

**03.06 தேர்வு செய்யும் முறை:** கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை

## 04. முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாத சேவைப் பிரிவு) MA 1-1
**பதவி எண்ணிக்கை - 01**

**04.01 தகைமைகள் - வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழி, கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

**மற்றும்**

க.பொ.த. (உயர் தர) பரீட்சையில் குறைந்தது மூன்று பாடங்களில் (சாதாரண பொது பரீட்சை தவிர்த்து) சித்தி பெற்றிருத்தல்.

**04.02 வேறு தகைமைகள்**

கணினி பயன்பாடு மற்றும் ஆங்கில மொழியில் பணியாற்றும் திறன் இருத்தல் நாடகம் மற்றும் அரங்கியற்கலை பாடத்தினை கற்றிருத்தல் அல்லது அந்தத் துறையில் அனுபவத்தைப் பெற்றிருத்தல், நிகழ்த்து கலைகள் தொடர்பில் நிறுவனங்களில் பணியாற்றிய அனுபவம் பெற்றிருத்தல் மற்றும் தமிழ் மொழி தொடர்பிலான அறிவு விசேட தகைமையாக கருதப்படும்.

க.கொ. ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழியில் பணியாற்ற முடியுமான ஒருவர் இதற்காக தேர்வு செய்யப்படுவார்.

**04.03 தகைமைகள் - உள்ளக விண்ணப்பதாரர்கள்**

முதலாம் தர – தேர்ச்சி அற்ற – பகுதி தேர்ச்சி மற்றும் தேர்ச்சி சேவைப் பிரிவுகளில் கீழுள்ள தகைமை உள்ள பணியாளர்கள் இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

I. க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழி, கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

II. ஆரம்ப தர நியமனம் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதோடு அந்த நிரந்தரச் சேவையில் 05 ஆண்டுகள் தொடர்ச்சியாக திருப்திகரமான சேவைக் காலம் ஒன்றை பூர்த்தி செய்திருத்தல்.

III. ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழியில் பணியாற்ற முடியுமான ஒருவர் இதற்காக தேர்வு செய்யப்படுவார்.

**04.04 வேறு தகைமைகள்**

மேல் குறிப்பிடப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல்.

**04.05 சம்பள அளவு :** ரூபா 46220-10X 540 -7X 630- 4 X 890- 20X1190 -83390

(முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 01/2025 இற்கு அமைவானது)

(குறித்த சுற்றுநிருபத்திற்கு அமைய 2025 ஆம் ஆண்டுக்கு உரித்துடைய அடிப்படைச் சம்பளம் மாதத்திற்கு ரூபா 40,403/- ஆகும். திறைசேரி மூலம் அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவாக ரூபா 17,800/- உரித்தாகும்.)

**04.06 வயது :** 18 வயதுக்கு குறையாத மற்றும் 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

**04.07 தேர்வு செய்யும் முறை :** கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை

மேலுள்ள விபரங்களுக்கு தொடர்புடைய வேறு விடயங்கள்

| | | |
|---|---|---|
| ஊழியர் சேமலாப நிதியத்திற்கு | - தொழில் வழங்குநரின் பங்களிப்பு | - 15% |
| | - ஊழியரின் பங்களிப்பு | - 10% |
| ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு தொழில் வழங்குநரின் பங்களிப்பு | | - 3% |

அரச, அரச சார்பு மற்றும் சட்ட ரீதியான சபையில் பணியாற்றுபவர்களுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது.

மேல் குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கு தகைமையை பூர்த்தி செய்திருக்கும் விண்ணப்பதாரர்கள் தகைமையை உறுதி செய்கின்ற சான்றிதழ்களின் பிரதிகளுடன் விண்ணப்பங்களை 2025.09.04 ஆம் திகதிக்கு முன்னர் கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்ப வேண்டும் என்பதோடு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தாம் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும். எதிர்காலத்தில் டவர் மண்டப அரங்க மன்றம் சுய இலாபம் ஈட்டும் நிறுவனம் ஒன்றாக அமையவுள்ளதால் திறமை, திறன் மற்றும் செயற்திறனில் முன்னிலையில் உள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரம் விண்ணப்பிக்க வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**டவர் மண்டப அரங்க மன்றம்,**
**சவ்சிறிபாய, இலக்கம் 123, விஜேராம மாவத்தை,**
**கொழும்பு 07.**